**நாள் 15.12.2023 OS.No. 147/2019 பி.சா.1 சாட்சி தினேஷ் மீண்டும் அழைக்கப்பட்டு 1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

என் அம்மா பெயர் ப்ளோரா. என் அம்மா பால் கறந்து விற்றார். அந்த விபரத்தை என்னுடைய எதிர்வழக்குரையில் சொல்லவில்லை. என் அப்பா மரியதாஸ் போலிஸாக இருந்தார். என் அப்பாவிற்கு மாதசம்பளம் 1982 இல் ரூ400 என்றால் எனக்கு தெரியாது குறைவாகதான் இருக்கும். நாங்கள் மொத்தம் 5 பிள்ளைகள். வீடு கட்டுவதற்கு முன்பு நாங்கள் காவலர் குடியிருப்பில் இருந்தோம். எங்களை படிக்க வைத்ததும் பராமரித்ததும் என் அப்பாவின் வருமானம் மற்றும் என் அம்மாவின் வருமானத்தை வைத்துதான். அந்த வருமானங்கள் எங்கள் குடும்பத்தை நடத்துவதற்கு போதவில்லை என்று சொன்னால் நிலங்கள் இருந்தன. எங்களுக்கு நிலங்கள் இருந்ததாக வழக்குரையிலும், எதிர்வழக்குரையிலும் சொல்லப்படவில்லை. என்னுடைய சகோதரர் 2 ஆம்பிரதிவாதி துபாயில் 5, 6 வருடங்கள் வேலை பார்த்தார். அவர் துபாயில் வேலை பார்த்தபோது மாதமாதம் என் அம்மாவிற்கு பணம் அனுப்புவார் என்றால் சரியல்ல. இடத்தில் கட்டடம் கட்டுவதற்கும் வசதிஇல்லை என்பதால் 2 ஆம் பிரதிவாதியின் அனுமதியுடன் என் அம்மா கடன் வாங்கினார் என்றால் சரியல்ல. கூட்டுறவு கடனை 2 ஆம் பிரதிவாதிதான் அடைத்தார் என்றால் சரியல்ல. காவலர் குடியிருப்பில் ஆடு, மாடு வளர்க்கவில்லை. எங்கள் சொந்த இடத்தில்தான் வளர்த்தார். சொந்த இடம் எங்களுக்கு இருக்கிறது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் வீட்டு பத்திரம் தாக்கல் செய்திருக்கிறோம். வீடு மற்றும் கடை உள்ள இடங்களை 2 ஆம் பிரதிவாதியின் வருமானத்தை கொண்டு 2 ஆம் பிரதிவாதி கிரயம் பெற்று 2 ஆம் பிரதிவாதியின் செலவில் கட்டிடம் கட்டப்பட்டு 2 ஆம் பிரதிவாதிதான் வாடகைக்கு விட்டார் என்றால் சரியல்ல என் அம்மாதான் கடன் வாங்கி கட்டியிருக்கிறார். அந்த சொத்துக்கள் 2 ஆம் பிரதிவாதியின் தனிபட்ட சொத்துக்கள் அதில் நாங்கள் பாகம் கோரமுடியாது என்று சொன்னால் வரி ஆவணங்கள் என் அம்மா பெயரில் இருக்கின்றன. 2 ஆம் பிரதிவாதி வெளிநாட்டில் வேலை பார்த்ததால் உடனடியாக அவரால் வரமுடியாது என்பதற்காக 2 ஆம் பிரதிவாதி பெயரில் ஆவணங்கள் மாற்றமுடியவில்லை என்றும் அதை பயன்படுத்திகொண்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றும்

சொன்னால் சரியல்ல இடம் வாங்கியபோது 1982 இல் 2 ஆம் பிரதிவாதி 9 ஆம் வகுப்பு படித்து கொண்டிருந்தார். 1990 ஆம் ஆண்டில்தான் அவர் வேலைக்கு போனார். எந்த அடிப்படையும் இல்லாமல் பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு என் சகோதரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

**2 ஆம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள்படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/– A. மலர்விழி)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.